In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.157/2021 | Prosecution witness P.W.1 |
| Name: Santhanakrishnan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 19-11-2024.

**(Accused are present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது அஞ்சுகுளிப்பட்டியில் வசிக்கிறேன். டீக்கடை வைத்துள்ளேன். எனக்கு மனைவி மற்றும் ஒரு மகள், ஒரு மகன் உள்ளார்கள். நான் சுமார் 10 வருடங்களாக டீக்கடை நடத்தி வருகிறேன். அப்போது மாணிக்கம்கடை என்ற ஊரைச்சேர்ந்த கருஞ்சாமி என்ற முருகன்(1வது எதிரி) எனது நண்பர் ஆனார். அவர் என்னிடம் தான் நாகமாணிக்க கல்லை வைத்திருப்பதாகவும் அதை விற்க வேண்டும் எனவும் சொன்னார். பார்ட்டியை ரெடிபன்னச் சொன்னார். அதற்கு நானே நாகமாணிக்கக் கல்லை வாங்கிக்கொள்வதாகவும், முதலில் ரூ.50000 முன்பணம் கொடுக்கும்படியும் பேசினோம். 2018ம் ஆண்டு 6வது மாதத்தில் ஊரில் வைத்து 1வது எதிரி கருஞ்சாமியிடம் முன்பணமாக ரூ.50000ம் கொடுத்தேன். அன்றைய தினம் பணத்தைப் பெற்றுக்கொண்டு 1வது எதிரி நாகமாணிக்கக்கல்லை ஒன்றை என் வசம் கொடுத்துவிட்டு மீண்டும் பறித்துக்கொண்டார்கள். அவருடன் அப்போது 3,4 பேர்கள் இருந்தார்கள். பின்னர் 2 மாதம் கழித்து மீண்டும் என்னிடம் 1வது எதிரி தொடர்பு கொண்டார். மீண்டும் நாகமாணிக்கக் கல்லை முடித்துக்கொள்வோம், வாருங்கள் எனச் சொன்னார். நான் சில நாட்கள் அதை தள்ளிப் போட்டேன். மீண்டும் என்னை அழைத்து நாகமாணிக்கக்கல்லுக்கு மேலும் ரூ.1 லட்சம் கொடுக்கும்படி கேட்டார்கள். நான் ஒரு வாரத்தில் பணம்

ரூ.1 லட்சத்தை தயார் செய்துகொண்டு அதே வருடம் 8 வது மாதத்தில் 1 வது எதிரி கருஞ்சாமியிடம் கொண்டுபோய் கொடுத்தேன். என்னிடம் ஒரு போலியான பாசியைக் கொடுத்து அதுதான் நாகமாணிக்கக் கல் என கூறினார். நான் அதை பெற்றுக்கொண்டு 1 வது எதிரியின் ஊரிலிருந்து என் ஊருக்கு வந்து பார்க்கும்போது அது போலியானது என தெரிந்து கொண்டேன். அதன் பின்னர் அதுபற்றி பேசுவதற்காக கருஞ்சாமியின் மொபைலுக்கு நான் தொடர்பு கொண்டபோது சுவிட்ச் ஆப் என வந்தது. பின்னர் ஒரு வாரம் கழித்து அவர்கள் ஊருக்குச் சென்று நேரடியாக பார்த்து ஏன் இப்படி செய்தீர்கள் என அழுதேன். அதற்கு அவர் பார்த்துக்கொள்ளலாம் என மன்னிப்பு கேட்டுவிட்டு போய் விட்டார். அதன் பின்பு எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்தது. அதன் பின்னர் 2019 ம் வருடம் ஜனவரி மாதம் 1 ம் எதிரி என்னிடம் மேலும் ரூ.1,50,000/– பணம் கேட்டார். 9.1.2019 ம் தேதி நானும் என் மகன் ஹரிஹரனும் இரவு 7 மணிக்கு மேற்படி பணத்தைக் கொடுப்பதற்காக மாமரத்துப்பட்டி சென்று 3 வது எதிரி கரந்தனின் தோட்டத்தில் வைத்து கொடுத்தோம். அப்போது அங்கு 5,6 நபர்கள் இருந்தார்கள். கருஞ்சாமி, சின்னையா, கரந்தன் ஆகிய 3 நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியும். மற்ற நபர்களின் பெயர் தெரியாது. அன்றைய தினம் ரூ.1,50,000/–த்தை 1 வது எதிரி கருஞ்சாமியிடம் கொடுத்துவிட்டு மறுநாள் பொருளை கொடுப்பதாகச் சொன்னதால் வந்துவிட்டோம். மறுநாள் 10.1.2019 ம் தேதி இரவு 7 மணிக்கு நானும், என் மகன் ஹரிகரனும், எனது மகனின் நண்பர் சிவாவும் இருசக்கர வாகனத்தில் 3 ம் எதிரி கரந்தனின் தோட்டத்திற்கு அந்த நாகமாணிக்கக்கல்லை வாங்குவதற்காகச் சென்றோம். 1 ம் எதிரி நாகமாணிக்கக்கல்லை எடுத்து டெஸ்ட் செய்து காட்டினார். உடனே வெளிச்சம் வந்தது. நாங்கள் அந்த பொருளை எடுத்தவுடன் அவர்கள் எடுக்கவிடாமல் இன்னும் கொஞ்சம் பணம் கொடுங்கள் என டிமாண்ட் செய்தார்கள். அதனால் இவ்வளவு பணம் கொடுத்துவிட்டோமே எனச்சொல்லி எங்களுக்குள்

வாக்குவாதம் வந்தது. அதற்கு இன்னும் பணம் வேணும் என கேட்டார்கள். அப்போது சிவா நாகமாணிக்கக்கல்லை வைத்திருந்தார். அந்த வாக்குவாதத்தில் ஒருவருக்கு ஒருவர் தள்ளிவிட்டு சிவாவை 1வது எதிரி கருஞ்சாமி என்ற முருகன் கத்தியால் வலதுபக்க முதுகில் குத்தினார். பின்னர் சிவாவும் கத்தியை பிடுங்கி 1வது எதிரி கருஞ்சாமியின் தொடையில் கிழித்துவிட்டார். என்னையும் என் மகனையும் சண்டை போட போகவிடாமல் 3 பேர் பிடித்து தடுத்துவிட்டார்கள். ஆஜர் எதிரிகளில் 3 முதல் 6 எதிரிகளை சாட்சி அடையாளம் காட்டி அவர்கள் தங்களை பிடித்துக்கொண்டதாக கூறுகிறார். பின்னர் நாங்கள் சிவாவாவை கூட்டிக்கொண்டு பைக்கில் போனோம். அவர்கள் கருஞ்சாமியை கூட்டிக்கொண்டு போனார்கள். சிவாவை அதிகாரிபட்டியில் உள்ள சின்னச்சாமி மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றோம். அங்கு பார்த்துவிட்டு ஆபத்தான நிலையில் இருப்பதால் இங்கு பார்க்க முடியாது அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள் எனச் சொன்னார். பின்னர் அதிகாரிபட்டியிலிருந்து ஒரு ஆட்டோவில் என் மகன் சிவாவை ஏற்றிக்கொண்டு சிலுவத்தூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றான். நான் பைக்கில் பின்னால் சென்றேன். அங்கேயும் பார்க்க முடியாது என்று சொல்லி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்செல்ல சொன்னார்கள். அங்கிருந்து ஆட்டோக்காரர் வரமாட்டேன் என ச் சொன்னதால் பைக்கில் மீண்டும் சிவாவை ஏற்றிக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிவாவை பரிசோதனை செய்துவிட்டு அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். பின்னர் நான் திண்டுக்கல் என்.எஸ்.நகரில் இருந்து சீலப்பாடி ரோட்டில் உள்ள சிவா வீட்டிற்குச்சென்று சிவாவின் பெற்றோர்களிடம் தகவல் சொன்னேன். திண்டுக்கல் அரசு மருத்துவமனை வரும் போது இரவு 10மணி இருக்கும். சிவாவின் வீட்டிற்கு தகவல் சொல்லவரும் போது இரவு 10.30 மணி இருக்கும். பின்னர் திண்டுக்கல் அரசு

மருத்துவமனை சென்றேன். பின்னர் இரவு 11 மணிக்கு வடமதுரை காவல் நிலையம் சென்று நடந்த சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் எழுதி கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு அதசாஆ.1. 1 வது எதிரி கருஞ்சாமி என்ற முருகன் சம்பவத்தை நிகழ்த்தியதாகவும், 6 பேர்கள் கூட இருந்ததாகவும் கொடுத்தேன். பின்னர் போலீசார் விசாரித்தபோதுதான் மற்ற எதிரிகளின் பெயர்களை எழுதி கொடுத்தேன். பின்னர் சம்பவம் நடந்த இடத்திற்கு போலீசார் என்னை இரவு 12 மணியளவில் கூட்டிப்போனார்கள். மறுநாள் காலையும் போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு என்னை கூட்டிப்போனார்கள். மாமரத்துப்பட்டியிலிருந்து 11.1.2019 ம் தேதி இரண்டு எதிரிகளை போலீசார் கூட்டி வந்தார்கள். 1 வது எதிரி கருஞ்சாமி தலைமறைவாக இருப்பதாக தெரியவந்தது. பின்னர் என்னையும் என் மகனையும் போலீசார் சிவா இறந்ததால் பதட்டமாக சூழ்நிலை இருப்பதால் நாங்கள் எங்கும் போகக் கூடாது என எங்களை ஒரு நாள் காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். 13.1.2019 ம் தேதி கருஞ்சாமியை ஆஜர்படுத்தியபிறகு 3 நாட்கள் கழித்து என்னையும் என் மகனையும் போலீசார் வெளியே விட்டார்கள். சம்பத்தின்போது சிவா கையில் இருந்த நாகமாணிக்கக்கல்லை 1 ம் எதிரி கருஞ்சாமி, சின்னையா, கரந்தன் மூவரும் பிடுங்கிக்கொண்டுதான் சண்டை போட்டார்கள். 1 ம் எதிரி கருஞ்சாமி குத்தியை கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் கத்தியைக் கொண்டுதான் 1 வது எதிரி சிவாவை குத்தினார். அந்த கத்தி சாபொ.1. சம்பவத்தன்று சிவா வெள்ளைக்கலரில் கருப்பு கட்டம் போட்ட சட்டையும், ப்ரவுன் கலர் பேண்ட்டும் அணிந்திருந்தார். அதைப்பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் வெள்ளைக்கலரில் கருப்பு கட்டம் போட்ட சட்டை சாபொ.2, ப்ரவுன் கலர் பேண்ட்

சாபொ.3 ஆகும். பின்னர் சிவாவை போஸ்ட்மார்ட்டம் செய்து உறவினர் வசம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–

நான் 10ம் வகுப்பு வரை படித்து உள்ளேன். அதசாஆ.1 புகாரை நான்தான் எழுதினேன். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள 2018ம் வருடம் 6வது மாதம் ரூ.50000மும், அதே வருடம் 8வது வருடம் ரூ.1 லட்சமும் கொடுத்த விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் ஜனவரி 2019ல் ரூ.1,50,000/– கொடுத்த விவரத்தையும் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2018ம் வருடம் 6வது மாதம் ரூ.50000ம் கொடுப்பதற்கு முன்பு 1வது எதிரியை எவ்வளவு நாளாக தெரியும் என்றால் மலையூர் சின்னராஜ் மூலமாக 2 மாதமாக பழக்கம். அந்த மலையூர் சின்னராஜ் நத்தம் பகுதியில் நாகமாணிக்கக்கல்லை மாற்றி தருவதாக பல ஆண்டுகளாக இந்த வேலை பார்த்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த நாகமாணிக்கக்கல் விலை மதிப்பற்றது, வெளி சந்தையில் பலகோடிக்கு போகும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதனால் 2018 ஜூன் மாதத்திற்கு முன்பே அந்த நாகமாணிக்கக்கல் எதுமாதிரி இருக்கும் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதியாகிய 9.1.2019ம் தேதி இரவு 7 மணிக்கு நானும் என் மகனும் சென்று ரூ.1,50,000/– த்தை கொடுத்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் 3 முதல் 6 எதிரிகள் என்னையும் என் மகனையும் சண்டை போடவிடாமல் தடுத்தார்கள் என்ற விவரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. 2019 காலகட்டத்தில் மாமரத்துப்பட்டிக்குச் செல்ல வேண்டும் என்றால் அந்த காலகட்டத்தில் பாலகிருஷ்ணாபுரம் பாலம் வேலை பார்த்துக்கொண்டிருந்ததால் சுப்புராம் பட்டறை வழியாகவும் அல்லது எம்.எஸ்.பி.

பள்ளி எதிரில் 3 கேட்டுகளை தாண்டி அந்த வழியாகவும் செல்லாலாம் என்றால் சரிதான். நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து கோபால்பட்டி வழியாக சென்றோம். எங்கள் வீட்டிற்கு சிவா வந்துவிட்டார். திரும்பி வரும்போது சவுந்தரராஜா மில் வழியாக நத்தம் ரோடு வழியாக அரசு மருத்துவமனை வந்துவிட்டோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரமும், அதற்கு முதல் நாள் ரூ.1,50,000 கொடுத்ததாக சொல்லப்படும் நேரமும் இருட்டு நேரம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் குரும்பபட்டியிலிருந்து செந்துறை செல்லும் சாலையில் வலது புறம் மாமரத்துப்பட்டியைத் தாண்டி அரை கி.மீ. தொலைவில் இருக்கும். நாங்கள் இருசக்கர வாகனத்தை தார் ரோட்டில் நிறுத்திவிட்டு நடந்து சென்றோம். நாங்கள் சென்ற இடம் வயல் வயலாக வரப்புடன் இருந்தது. அந்த இடம் மேடு பள்ளமாக இருந்தது. கரந்தன் வீட்டில் இருந்து சம்பவ இடம் சுமார் 100 மீட்டர் தொலைவில் இருந்தது. 1வது எதிரி தவிர மற்ற 5 எதிரிகளையும் அன்றைய தினம்தான் பார்த்தேன் என்றால் சரிதான். அன்றைய தினம் போலீசார் விசாரித்தபோது 1வது எதிரி தவிர மற்ற எதிரிகளின் பெயர்கள், தகப்பனார் பெயர்கள், உயரம், அங்க அடையாளங்களை புகார் மனுவில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நாகமாணிக்கக்கல்லை டெஸ்ட் செய்த பிறகு சிவா கல்லை சீஸ் செய்துவிட்டார், கூடுதலாக பணம் கேட்டு வாக்குவாதம் நடந்தபோது முதலில் கருஞ்சாமிதான் கத்தியால் சிவாவை குத்தினார். கரும் இருட்டில் 1ம் எதிரிதான் சிவாவை குத்தினார் என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் 3வது எதிரி வீட்டில் டாப் லைட் எறிந்தது. அந்த வெளிச்சத்தில் தெரிந்துகொண்டேன். கருஞ்சாமிக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்றால் சிவா காயம்பட்ட பின்னர் அந்த கத்தியைக் கொண்டு 1ம் எதிரி கருஞ்சாமியை குத்தினார். அவ்வாறெனில் காயம்பட்ட சிவா 1வது எதிரியை குத்தும் அளவுக்கு நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரிதான். சிவாவை கருஞ்சாமியை குத்தச்செல்லும்போது நானோ என் மகனோ

கருஞ்சாமியை தடுத்தோமா என்றால் 3 பேர்கள் எங்களை பிடித்துக் கொண்டார்கள். சிவா கருஞ்சாமியை குத்தப்போகும்போது அங்கு இருந்த மற்ற நபர்கள் தடுத்தார்களா என்றால் தடுத்தார்கள். அதைத் தாண்டி சிவா குத்திவிட்டார் என்றால் சரிதான். முதலில் என்னுடைய இருசக்கர வாகனத்தில் சிவாவை அதிகாரிபட்டியில் உள்ள வைத்தியரிடம் கூட்டிச்சென்றோம், பின்னர் அங்கிருந்து சிலுவத்தூர் அரசு மருத்துவமனைக்கும் பின்னர் அங்கிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கும் கூட்டிச்சென்றபோது சிவாவின் உடம்பில் இருந்து வெளியேறிய இரத்தம் எங்களின் ஆடைகளில் பட்டது என்றால் சரிதான். எங்களது இரத்தம்பட்ட துணிகளை போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிவாவை சேர்த்தபோது அவரை பிரேம்குமார் என்பவர் சேர்த்தாக உள்ள நிலையில் அந்த பிரேம்குமார் யார் என தெரியுமா என்றால் நானும் என் மகனும்தான் மருத்துவமனையில் சிவாவை சேர்த்தோம். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு நாங்கள் வந்தபோதே போலீசாரும் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரிதான். போலீசாருடன் வடமதுரை காவல் நிலையம் சென்று இரவு 11 மணிக்கு புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அங்கிருந்து நேராக நள்ளிரவு 12 மணிக்கு சம்பவ இடம் சென்றபோது போலீசார் அந்த இடத்தில் இருந்த கத்தியை எடுத்தார்கள் என்றால் சரிதான். மறுநாள் காலை 10 மணிக்கு சம்பவ இடம் சென்று போலீசார் 3வது எதிரி கரந்தனிடம் விசாரணை செய்தார்கள் என்றால் கரந்தன் அங்கு இல்லை. கரந்தனின் மனைவியை விசாரித்தார்கள். 11.01.2019ம் தேதி போலீசார் காவல் நிலையத்திற்கு 2 மற்றும் 3வது எதிரிகளை அழைத்து வந்தார்கள். 13.1.2019ம் தேதி ஊர் பெரியவர்களை வைத்து 1வது எதிரி கருஞ்சாமியை அழைத்துவந்து காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். 10.01.2019ம் தேதியிலிருந்து 15.01.2019ம் தேதிவரை 5 நாட்கள் என்னையும் என் மகனையும் வடமதுரை காவல் நிலையத்தில்

வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். 4, 5, 6 எதிரிகளை நாங்கள் காவல் நிலையத்தில் இருந்த 15.1.2019 தேதிவரை போலீசார் காவல் நிலையத்திற்கு கூட்டி வரவில்லை என்றால் சரிதான். 2018 க்கு முன்பே நான் நாகமாணிக்கக்கல் எனச் சொல்லி பலபேரை ஏமாற்றி வந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஒவ்வொரு இடத்திலும் பல நபர்களை அழைத்துச்சென்று விளக்கு போட்டு சாதாரண கல்லை நாகமாணிக்கக்கல் எனச் சொல்லி பல ஆண்டுகளாக ஏமாற்றி வருவதுதான் எனது தொழில் என்றால் சரியல்ல. அதுமாதிரி 1 வது எதிரியையும் இறந்துபோன சிவாவையும் என்னுடன் வா ஆளுக்கு ரூ.1000 தருகிறேன் என அழைத்துக்கொண்டு சென்று வேறு ஒரு இடத்தில் நவரத்தினக்கல் என ஒரு கல்லை லைட் போட்டு காண்பித்து வேறு நபர்களிடம் பல லட்சம் பணம் பெற்றுக்கொண்டு போலீஸ் வருவதாக தகவல் சொல்லி அவரிடம் பணம் பறித்துவிட்டு அவர்கள் பணம் போன விரக்தியில் அவர்களால் ஏற்படுத்திய காயம்தான் இறந்துபோன சிவாவிற்கும், கருஞ்சாமிக்கும் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல. சிவாவிற்கு உயிர் போகும் அளவிற்கு காயம் ஏற்படுத்தும் நிலையில் 1ம் எதிரி இல்லை என்றும் ஏற்கனவே அவர் பல இடங்களில் காயங்களுடன் இருந்தார் என்றால் சரியல்ல. 2 முதல் 6 எதிரிகளை நான் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் பார்த்தது இல்லை என்றும் அவர்கள் சம்பவ இடத்திலும் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் எந்த இடத்திலாவது கருஞ்சாமி என்ற பெயரை சொல்லி உள்ளேனா என்றால் முருகன் எனச் சொல்லி உள்ளேன். சட்டவிரோத செயல்களுக்காக நான் கூட்டிச்செல்லும் நபர்களுக்கு பெயரை மாற்றிச் சொல்வேன் என்றும் அவ்வாறு சொல்லப்பட்ட பெயர்தான் முருகன் என்ற பெயர் என்றால் சரியல்ல. இந்த எதிரிகளால் இறந்துபோன சிவாவிற்கு எவ்வித காயங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. சாபொ.1 கத்தியால் இந்த வழக்கில் எந்தவித காயமும்

ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.11.19 17:55:13 +0530

Principal District Judge,
Dindigul.